www.Padasalai.Net www.TrbTnpsc.com

# பத்தாம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வு – மார்ச் 2025 தமிழ் விடைக் குறிப்பு

## மொழிப்பாடம் – பகுதி – I – தமிழ்

| | | | |
|---|---|---|---|
| 1 | ஆ | இன்மையிலும் விருந்து | 1 |
| 2 | இ | நடித்தல் நடிப்பு | 1 |
| 3 | இ | உருவகம் | 1 |
| 4 | அ | செப்பல் | 1 |
| 5 | இ | வலிமையை நிலைநாட்டல் | 1 |
| 6 | ஈ | சருகும் சண்டும் | 1 |
| 7 | அ | கருணையன் எலிசபெத்துக்காக | 1 |
| 8 | ஆ | வினைத் தொகை | 1 |
| 9 | இ | தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்கு தனித்த இடம் உண்டு | 1 |
| 10 | ஆ | பெற்ற சுதந்திரத்தை பேணிக்காத்தல் | 1 |
| 11 | இ | மூன்று நாள் | 1 |
| 12 | ஆ | பரிபாடல் | 1 |
| 13 | அ | உருஅறி உந்துவளி | 1 |
| 14 | ஈ | அடுக்குத் தொடர் | 1 |
| 15 | இ | கீரந்தையார் | 1 |
| 16 | | விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்கள் :<br>1) வாருங்கள் ஐயா, வணக்கம்!<br>2) அமருங்கள்.<br>3) நலமாக இருக்கிறீர்களா?<br>4) தங்கள் வரவு நல்வரவு | 2 |
| 17 | அ | புதிய படைப்புகள் உருவாக உதவுவது எது ? | 1 |
| | ஆ | உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் யார் ? | 1 |
| 18 | | 1) பாசவர் – வெற்றிலை விற்பவர்கள்<br>2) வாசவர் – நறுமணப்பொருட்களை விற்பவர்கள்<br>3) பல்நிணவிலைஞர் – பல்வகை இறைச்சிகளை விலைகூறி விற்பவர்கள்<br>4) உமணர் – உப்பு விற்பவர் | 2 |
| 19 | | நச்சப் படாதவன் – விரும்பப் படாதவன் , பிறருக்கு உதவி செய்யாதவன் | 2 |
| 20 | | அவையம்:<br>1. அறம் கூறும் மன்றங்கள், அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணை புரிந்தன.<br>2. அறம் கூறு அவையம் பற்றி 'அறம் அறக்கண்ட நெறிமான் அவையம்' என்கிறது புறநானூறு.<br>3. உறையூரில் இருந்த அவையம் தனிச்சிறப்புப் பெற்றது என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.<br>4. மதுரைக்காஞ்சி, 'மதுரையில் இருந்த அவையம் துலாக்கோல் போல நடுநிலை மிக்கது' என்கிறது. | 2 |
| 21 | | பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்<br>பொருளல்லது இல்லை பொருள். | 2 |
| 22 | | அறியா வினா | 1 |
| | | ஐய வினா | 1 |
| 23 | அ | ஊட்டமிகு உணவு உண்டவர் நீண்ட வாழ்நாள் பெற்றார் | 1 |
| | ஆ | பொது அறிவு நூல்களைத் தேடிப்படித்தவர் போட்டித் தேர்வில் வென்றார் . | 1 |
| | | | |



நே ஜாய் கிறிஸ்டினாள் , பட்டதாரி ஆசிரியர் – தமிழ் ,
ஸ்ரீ சரசுவதி வித்தியா சாலை பெண்கள் மேல்நிலைப் பள்ளி , புதுவயல் , சிவகங்கை மாவட்டம் .

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

| | | | |
|---|---|---|---|
| 24 | | கிளர்ந்த– கிளர்+த்(ந்)+த்+அ<br>கிளர்– பகுதி :<br>த்–சந்தி :<br>ந்– விகாரம் :<br>த்– இறந்த கால இடைநிலை<br>அ– பெயரெச்ச விகுதி | 2 |
| 25 | | Classical literature – செவ்விலக்கியம் | 1 |
| | | Emblem – சின்னம் | 1 |
| | | செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா<br>மலை முகட்டில் மேகம் தங்கும். அதைப்<br>பார்க்கும் மனங்கள் செல்லத் தயங்கும். | 1<br>1 |
| 26 | அ | கண்ணும் கருத்துமாக –<br>தாய் தன் குழந்தையே கண்ணும் கருத்துமாக பார்த்துக் கொண்டார். | 1 |
| | ஆ | அள்ளி இறைத்தல் –<br>தனக்கு அதிக பணம் இருக்கு என்று அள்ளி இறைத்தல் கூடாது. | 1 |
| 27 | | தீவக அணி மூவகைப்படும். அவை:<br>1) முதல் நிலைத் தீவகம்<br>2) இடைநிலைத் தீவகம்<br>3) கடைநிலைத் தீவகம் எனப்படும். | 2 |
| 28 | | நாலெழுத்தில் கண் சிமிட்டும் – கடையிரண்டில் நீந்திச் செல்லும் – விண்மீன் | 1 |
| | | ஓரெழுத்தில் சோலை – இரண்டெழுத்தில் வனம். – காடு | 1 |
| 29 | | எதிர்காலத் தொழில்நுட்பம்<br>முன்னுரை :<br>உயிரினங்களில் மனிதரை உயர்த்திக்காட்டுவது அவர்களின் சிந்தனை ஆற்றலே! அந்தச் சிந்தனைக்குத் தொழில்நுட்பமும் துணை செய்கிறது. திறன்பேசிகளில் இயங்கும் உதவு மென்பொருள் கண்ணுக்குப் புலப்படாத மனிதனைப் போல நம்முடன் உரையாடி உதவி செய்கிறது.<br>நாம் சொல்கிறவர்களுக்குத் தொலைபேசியில் அழைப்பு விடுக்கும். நாம் திறக்க கட்டளையிடுகிற செயலியைத் திறக்கும். நாம் கேட்பதை உலாவியில் தேடும்.<br>நாம் விரும்பும் அழகான கவிதைகளை இணையத்தில் தேடித்தரும். எந்தக்கடையில் எது விற்கும் என்று சொல்லும். படிப்பதற்கு உரிய நூல்களைப் பட்டியலிடும். நாம் எடுத்த ஒளிப்படங்களைப் பற்றி பட்டியலிடும்.<br>முடிவுரை :<br>எதிர்காலத்தில் நம் நெருங்கிய நண்பர்கள், குடும்பத்தினர் ஆகியோரை விடவும் உதவு மென்பொருள் நம்மை நன்கு அறிந்திருக்கும். | 3 |
| 30 | அ | சிலம்புச் செல்வர் என அழைக்கப்படுபவர் யார் ? ம .பொ .சி . | 1 |
| | ஆ | தமிழினத்தின் பொதுச் சொத்து எது ? சிலம்பு | 1 |
| | இ | பத்தியில் இடம்பெறும் இரண்டு நூல்களின் பெயர் : சிலப்பதிகாரம் , திருக்குறள் | 1 |
| 31 | | மின் விசிறிக் காற்று : நண்பா! வா எங்கெல்லாம் சுற்றித் திரிந்து வருகிறாய்? என்னைப் போல் நிலையாக ஓரிடத்திலிருந்து வீசக்கூடாதா.?<br>சோலைக்காற்று : நீ ஓரிடத்தில் இருந்து நிலையாக வீசினாலும் உன்னை இயக்க ஒருவர் தேவை. அது மட்டுமல்லாமல் நீ கொடுக்கும் | 3 |



நே ஜாய் கிறிஸ்டினாள் , பட்டதாரி ஆசிரியர் – தமிழ் ,
ஸ்ரீ சரசுவதி வித்தியா சாலை பெண்கள் மேல்நிலைப் பள்ளி , புதுவயல் , சிவகங்கை மாவட்டம் .

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

| | | | |
|---|---|---|---|
| | | வெப்பக்காற்றை மனிதர்கள் வேறு வழியின்றி பயன்படுத்துகின்றனர். மின்சாரம் தடைப் பட்டாலும் மனிதர்கள் உன்னை இயக்க முடியாது.<br>**மின் விசிறிக் காற்று** : மனிதர்கள் உன்னை விரும்புகிறார்களா?<br>**சோலைக்காற்று** : ஆம், நான் மக்களுக்குக் குளிர்ந்த காற்றைக் கொடுக்கிறேன். என்னிலிருந்து மின்சாரம் தயாரிக்கின்றனர். காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியா ஐந்தாம் இடத்திலும் தமிழகம் முதல் இடத்திலும் உள்ளது. புதுப்பிக்கக் கூடிய வளமான என்னைப் பயன்படுத்தி மின்னாற்றலை உருவாக்கும் போது நிலக்கரியின் தேவை குறைந்து கனிம வளங்கள் பாதுகாக்கப்படுகிறது.<br>**மின் விசிறிக் காற்று** : இத்தனை சிறப்புகள் கொண்ட உன்னை வைத்து ஒரு புது மொழியை உலகிற்குக் கூறப்போகிறேன்.<br>**சோலைக்காற்று** : அப்படியா! அப் புது மொழி யாது?<br>**மின் விசிறிக் காற்று** : "காற்றுள்ள போதே மின்சாரம் எடுத்துக் கொள்". | |
| 32 | | **உடலில் ஏற்பட்ட புண் :**<br>மருத்துவர் உடலில் ஏற்பட்ட புண்ணைத் துன்பம் தரும்படி கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அத்துன்பம் தனக்கு நன்மையே என்று உணர்ந்து நோயாளி மருத்துவர் மீது அன்பு காட்டுவார்.<br>**நீங்காத துன்பம் :**<br>வித்துவக்கோட்டில் எழுந்தருளியிருக்கும் அன்னையே! மருத்துவரைப் போன்று நீ எனக்குத் துன்பத்தைத் தந்தாலும், உன் அடியவனாகிய நான் (நோயாளியைப் போல) உன் அருளையே எப்பொழுதும் எதிர்பார்த்து வாழ்கிறேன். | 3 |
| 33 | | வீட்டின் சுவர், சன்னல் போன்றவற்றில் அழுக்குப் படிந்தும், சன்னல்களில் கரையான் படிவதைத் தடுக்க, வாளித் தண்ணீரைக் கொண்டு சுவரையும் ஜன்னலையும் நன்கு கழுவ வேண்டும்.<br>பிறகு கந்தை துணியால் நன்கு துடைத்து விட வேண்டும்.<br>மூன்றாவதாக சாயக் குவளையில் உள்ள சாயத்தை கட்டைத் தூரிகை கொண்டு சாயம் பூசி புதுப்பிக்க வேண்டும். | 3 |
| 34 | அ | வெய்யோன் ஒளி தன் மேனியின்விரி சோதியின் மறைய,<br>பொய்யே எனும் இடையாளொடும், இளையானொடும் போனான் –<br>'மையோ, மரகதமோ, மறிகடலோ, மழை முகிலோ,<br>ஐயோ, இவன் வடிவு!' என்பது ஓர் அழியா அழகு உடையான். | 3 |
| | ஆ | அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!<br>முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!<br>கன்னிக் குமரிக் கடல் கொண்ட நாட்டிடையில்<br>மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே! | 3 |
| 35 | | அவந்தி நாட்டு மன்னன், மருத நாட்டு மன்னனுடன் போர் புரிந்து அந்நாட்டைக் கைப்பற்ற நினைக்கிறான்: அப்போர் நிகழ்வைப் புறப்பொருள் வெண்பா மாலை கூறும் இலக்கணத்தின் வழி விளக்குக . | 3 |



நே ஜாய் கிறிஸ்டினாள் , பட்டதாரி ஆசிரியர் – தமிழ் ,
ஸ்ரீ சரசுவதி வித்தியா சாலை பெண்கள் மேல்நிலைப் பள்ளி , புதுவயல் , சிவகங்கை மாவட்டம் .

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

1) இந்நிகழ்வுக்கு பொருத்தமான திணை "வஞ்சித்திணை" ஆகும் மண்ணாசை காரணமாகப் பகைவர் நாட்டைக் கைப்பபற்றக் கருதி வஞ்சிப்பூவைச் சூடிப் போருக்குச் செல்வது வஞ்சித்திணையாகும்.

2) அவந்தி நாட்டு மன்னன், மருத நாட்டு மன்னனுடன் பகைகொண்டு போர்புரிந்து மருத நாட்டைக் கைப்பற்ற நினைப்பதால் இந்நிகழ்வு "வஞ்சித்திணைக்குப்" பொருந்தி வருகிறது.

**36** (3)

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

– இக்குறளில் பயின்று வந்துள்ள அணியின் இலக்கணம் யாது?

- ❖ இக்குறட்பாவில் அமைந்துள்ள அணி நிரல்நிறையணியாகும்.
- ❖ இலக்கணம்: நிரல் – வரிசை: நிறை – நிறுத்துதல்.
- ❖ சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி, அவ்வரிசைப்படியே இணைத்துப் பொருள் கொள்வது நிரல் நிறை அணி எனப்படும்.

**37** (3)

**நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்**
**நாள்தொறும் நாடு கெடும் .**

| | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1 | நாள் / தொறும் | நேர் / நிரை | கூவிளம் |
| 2 | நா / டி | நேர் / நேர் | தேமா |
| 3 | முறை / செய் / யா | நிரை / நேர் / நேர் | புளிமாங்காய் |
| 4 | மன் / னவன் | நேர் / நிரை | கூவிளம் |
| 5 | நாள் / தொறும் | நேர் / நிரை | கூவிளம் |
| 6 | நா / டு | நேர் / நேர் | தேமா |
| 7 | கெடும் | நிரை | மலர் |

❖ இக்குறட்பா " மலர் " என்னும் வாய்பாட்டில் முடிவடையும் .

**38** அ (5)

**வழிகாட்டல் :–**

பகலில் இளைப்பாறிச் செல்லுங்கள். இரவில் சேர்ந்து தங்குங்கள். எரியும் நெருப்பைப் போல ஒளிரும் பூங்கொத்துகளைச் சுற்றத்தோடு அணிந்து கொள்ளுங்கள். சிவந்த பூக்கள் கொண்ட அசோக மூங்கில்கள் ஓசை எழுப்பும் மலைச்சரிவில் உள்ள சிற்றூரை அடையங்கள்.

**நன்னின் கூத்தர்கள்:–**

பகைவரே இல்லாமல் ஆட்சி செய்பவன், பகை வந்தாலும் எதிர் கொள்ளும் மானமும் வெற்றியும் உடைய நன்னனின் கூத்தர்கள் என்று சொல்லுங்கள்.

**இன் சொற்கள்:–**

நீங்கள் உரிமையுடன் உங்கள் வீட்டிற்கு போவது போலவே அவர்களுடைய வீட்டிற்குள் நுழையுங்கள். அவர்களும் உங்களிடம், உறவினர் போலப் பழகி இனிய சொற்களைப் பேசுவார்கள்.

**உணவு:–**

நெய்யில் வெந்த மாசிசம், தினைச் சோறு ஆகியவற்றை உணவாக அளிப்பர். அவற்றை நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

ஆ (5)

வள்ளுவம், சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதைக் குறள்வழி விளக்குக.

> கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
> அருவினையும் மாண்ட தமைச்சு.



நே ஜாய் கிறிஸ்டினாள் , பட்டதாரி ஆசிரியர் – தமிழ் ,
ஸ்ரீ சரசுவதி வித்தியா சாலை பெண்கள் மேல்நிலைப் பள்ளி , புதுவயல் , சிவகங்கை மாவட்டம் .

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

| | | | |
|---|---|---|---|
| | | தொழில் செய்வதற்குத் தேவையான கருவி, அதற்கு ஏற்ற காலம், செயலின் தன்மை, செய்யும் முறை ஆகியவற்றை அறிந்து அரிய செயல்களைச் செய்தல் வேண்டும்.<br>வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ டைந்துடன் மாண்ட தமைச்சு.<br>மனவலிமை, குடிகளைக் காத்தல், ஆட்சிமுறைகளைக் கற்றல், நூல்களைக் கற்றல், விடாமுயற்சி ஆகிய ஐந்தும் சிறப்பாக அமைய வேண்டும்.<br>**சூழ்ச்சிகள்:**<br>மதிநுட்பம் நூலோ டுடையார்க் கதிநுட்பம் யாவுள முன்நிற் பவை.<br>இயற்கையான நுண்ணறிவு, நூலறிவு இவற்றை உடையவர்கள் முன் எந்த சூழ்ச்சியும் நிற்க இயலாது.<br>**நடைமுறைகளை எறிதல்:**<br>செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத் தியற்கை அறிந்து செயல்.<br>ஒரு செயலைச் செய்வதற்குரிய முறைகளை நூல்வழியாக அறிந்திருப்பினும் உலகியல் நடைமுறைகளை அறிந்து செயல்பட வேண்டும். | |
| 39 | அ | **உணவு பாதுகாப்பு ஆணையருக்கு முறையீட்டுக் கடிதம் .**<br>அனுப்புநர்<br>-----------,<br>-----------,<br>-----------.<br>பெறுநர்<br>உணவு பாதுகாப்பு ஆணையர் அவர்கள்,<br>உணவு பாதுகாப்பு ஆணையம்,<br>-------- மாவட்டம் .<br>மதிப்பிற்குரிய ஐயா,<br>பொருள் : தரமற்ற கெடு நாள் முடிந்த உணவுப் பொருள் விற்ற பல்பொருள் அங்காடியின் மீது நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுதல் – தொடர்பாக .<br>வணக்கம் நான் கடந்த இரு தினங்களுக்கு முன்பு (பல்பொருள் அங்காடியின் பெயர்) பல்பொருள் அங்காடியில் சில ரொட்டிகள் வாங்கி உண்டேன் .<br>உணவு உண்ட சில மணி நேரத்தில் எனக்கு வாந்தியும் மயக்கமும் ஏற்பட்டது. மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது கெட்டுப்போன உணவை சாப்பிட்டதால் இவ்வாறு ஏற்பட்டுள்ளது என்று கூறினர்.அந்த ரொட்டிகளின் கெடு நாள் தேதியைப் பார்த்த பொழுது , கெடுநாள் முடிந்து இருந்தது .<br>ஆகவே தரமற்றதாகவும், கெடுநாள் முடிந்த உண வழங்கிய உணவு பல்பொருள் அங்காடியின் மீது நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.<br>நன்றி .<br>இடம்: இப்படிக்கு,<br>தேதி: - - - - - - -<br>உறையின் மேல் எழுதவேண்டிய முகவரி:<br>உணவு பாதுகாப்பு ஆணையர் அவர்கள்,<br>உணவு பாதுகாப்பு ஆணையம்,<br>................................ மாவட்டம் . | 5 |



நே ஜாய் கிறிஸ்டினாள் , பட்டதாரி ஆசிரியர் – தமிழ் ,
ஸ்ரீ சரசுவதி வித்தியா சாலை பெண்கள் மேல்நிலைப் பள்ளி , புதுவயல் , சிவகங்கை மாவட்டம் .

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**ஆ** **பாராட்டுக் கடிதம்** **5**

_ _ _ _ _ _ _ தெரு,
_ _ _ _ _ _ _
28-03-2025.

அன்புள்ள நண்பா,

நான் இங்கு நலம். உனது நலம் அறிய ஆவல். உன் குடும்பத்தினர் நலமும் அறிய ஆவல். "தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று" என்ற பொய்யாமொழிப் புலவரின் வரிகளை மெய்யாக்கியவன் நீ. கலைத் திருவிழாவில் மாநில அளவிலான நடனப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்றாய் என்பதை ஊடகங்கள் மூலம் அறிந்தேன்: உள்ளம் மகிழ்ந்தேன்.

உன்னுடைய வெற்றி தொடர வேண்டும். உன்னுடைய திறமை உலக அரங்கில் அறியப்பட வேண்டும். இதுவே, என்னுடைய ஆசை. உன்னுடைய பதில் மடலை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்.

அன்புள்ள நண்பன்,
_ _ _ _ _ _ _

உறைமேல் முகவரி:
பெறுநர்
_ _ _ _ _ _ _
_ _ _ _ _ _ _ தெரு,
_ _ _ _ _ _ _,
_ _ _ _ _ _ _ மாவட்டம்.

**40** **5**

**அலைபேசி**

கைகளில் தவழும் குழந்தையே..
நீயின்றி நானில்லை !
உன் நினைவால்..உறக்கமில்லை....
பெருமையாக நினைத்துஉன்னை மதித்தேன் !
அதனால் நீ.....என் முதுகின் மீது ஏற
எனக்கே பாரமாகி கைகளிலே சாட்டையோடு..
என்னை அடிமையாக்கி சவாரியும் செய்வதேனோ !

**அலைபேசி**

விடுதலை பெற்றோம் – ஆனால்
அடிமைத்தனம் அகலவில்லை
அறிவியலுக்கு அடிமையானோம்
எந்த மகாத்மா வருவார்
எங்கள் அடிமை தீர்ப்பார்

**41** **விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் படிவம் நிரப்புதல்** **5**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர்
சேர்க்கை விண்ணப்பப் படிவம்

1. மாணவரின் பெயர் : கவிதா
2. பாலினம் : பெண்
3. பிறந்த தேதி : 01-06-2010
4. தேசிய இனம் : இந்தியன்
5. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் : கலைச்செல்வி
6. இரத்த வகை : B +
7. உயரம் மற்றும் எடை : உயரம் 150 செ.மீ . எடை : 50 கி.கி
8. விட்டு முகவரி : எண் : 20 , பாரதிதாசன் நகர் , விழுப்புரம் விழுப்புரம் மாவட்டம்
9. தொலைபேசி / அலைபேசி எண் : xxxxx xxxxx
10. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு : 10
11. பள்ளியின் முகவரி : அரசு உயர்நிலைப் பள்ளி , விழுப்புரம் .
12. சேர விரும்பு விளையாட்டு : கபடி

சேர்க்கை எண் : xxxxxx

கவிதா
மாணவரின் கையெழுத்து

தேதி : 28.03.2025
இடம் : விழுப்புரம்

கலைச் செல்வி
பெற்றோர் / பாதுகாவலரின் கையெழுத்து



நே ஜாய் கிறிஸ்டினாள் , பட்டதாரி ஆசிரியர் – தமிழ் ,
ஸ்ரீ சரசுவதி வித்தியா சாலை பெண்கள் மேல்நிலைப் பள்ளி , புதுவயல் , சிவகங்கை மாவட்டம் .

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

| | | | |
|---|---|---|---|
| 42 | அ | **இன்சொற்கள் பேசுவதனால் ஏற்படும் நன்மைகள் :**<br>1) பிறர் மனம் மகிழும்<br>2) அறம் வளரும்<br>3) புகழ் , பெருமை சேரும்<br>4) நல்ல நண்பர்கள் சேருவர்<br>5) அன்பு நிறையும் | 5 |
| | ஆ | **மொழிபெயர்ப்பு :**<br>1. பள்ளியில் படித்தவற்றுள் மறந்தபின் மீதம் உள்ளவையே கல்வியாகும்<br>2. வாரத்தின் நாள்களில் நாளை என்பதே பெரும்பாலும் சுறுசுறுப்பான நாளாகும்.<br>3. கடினமான சூழலில் நமது கவனம் வெற்றியை நோக்கி இருக்க வேண்டும்.<br>4. வெற்றி என்பது இறுதி அன்று. தோல்வி என்பது அழிவு அன்று. தொடர்ச்சியான துணிவே சிறப்பானது.<br>5. மொழி என்பது பண்பாட்டின் வழி காட்டி. அது மக்கள் எங்கே இருந்து வருகிறார்கள், எங்கே செல்கிறார்கள் என்பதனைக் கூறும். | 5 |
| | | **செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா**<br>1. மேற்கிலிருந்து வீசும் காற்று – கோடை<br>2. ஊதைக் காற்று என்று அழைக்கப்படுவது – மிகவும் குளிர்ந்த காற்று<br>3. மேற்கு என்பதன் மற்றொரு பெயர் – குடக்கு<br>4. வாடை என்பது எத்திசையைக் குறிக்கிறது – வடக்கு<br>5. பகுதிக்கு ஏற்ற தலைப்பு – காற்று | 5 |
| 43 | அ | **முன்னுரை**<br>கலைஞர் கருணாநிதி திருவாரூர் மாவட்டத்தில் உள்ள திருக்குவளையில் 3 ஜூன் 1924–ல் பிறந்தார். கலைஞர் பகுத்தறிவு கொள்கை பரப்பும் சிந்தனையாளர். பழுமரக்கனிப் பயன்கொள்ளும் பேச்சாளர். படிப்பவரைக் கவரும் ஆற்றல் கொண்ட எழுத்தாளர். கலைத் துறையில் வாகை சூடிய படைப்பாளர். முத்தமிழிலும் வல்ல வித்தகர்.<br>**போராட்டக் கலைஞர்**<br>கலைஞர், திருக்குவளையில் தொடக்கக் கல்வியும், திருவாரூரில் உயர்நிலைக் கல்வியும் பயின்றார். 1921இல் சென்னை மாகாணத்திற்கு நீதிக்கட்சியின் சார்பில் முதல் அமைச்சராக இருந்த பனகல் அரசரின் சாதனைகளைக் கூறும் நூலைப் படித்தார். அந்நூல் அவருக்கு அரசியல் அரிச்சுவடியாக அமைந்தது. தன்னுடைய 14ஆம் வயதில் பள்ளி முடிந்த பின்பு தான் எழுதிய "வாருங்கள் எல்லோரும் போருக்குச் சென்றிடுவோம்" என்ற பாடலை முழங்கியபடி, இந்தித் திணிப்பை எதிர்த்து திருவாரூர் வீதிகளில் மாணவர்களுடன் சேர்ந்து போராடினார்.<br>**பேச்சுக் கலைஞர்**<br>இளமைப்பருவத்திலேயே தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கருத்துகள் கலைஞரை ஈர்த்தன. பட்டுக்கோட்டை அழகிரி, அறிஞர் அண்ணா ஆகியோரின் பேச்சாற்றல் அவரைக் கவர்ந்தது. இளம் வயதில் "நட்பு" என்னும் தலைப்பில் ஆற்றிய சொற்பொழிவு பலராலும் பாராட்டப்பட்டது. பள்ளிப் பருவத்திலேயே மாணவர்களுக்குப் பேச்சுப்பயிற்சி அளிப்பதற்காகச் "சிறுவர் சீர்திருத்தச் சங்கம்" மாணவரிடையே ஒற்றுமையுணர்வை வளர்த்தெடுக்கத் "தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம்" ஆகிய அமைப்புகளைத் தொடங்கினார். | 8 |



நே ஜாய் கிறிஸ்டினாள் , பட்டதாரி ஆசிரியர் – தமிழ் ,
ஸ்ரீ சரசுவதி வித்தியா சாலை பெண்கள் மேல்நிலைப் பள்ளி , புதுவயல் , சிவகங்கை மாவட்டம் .

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

| | | | |
|---|---|---|---|
| | | **நாடகக் கலைஞர்**<br>கலைஞர் எழுதிய 'பழநியப்பன்' என்னும் முதல் நாடகம், 1944ஆம் ஆண்டு அரங்கேற்றப்பட்டது. 'சாம்ராட் அசோகன், மணிமகுடம், வெள்ளிக்கிழமை, காகிதப்பூ' உட்பட பல நாடகங்களை எழுதினார். தான் எழுதிய 'தூக்குமேடை' என்னும் நாடகத்தில் நடிகர் எம்.ஆர். இராதாவின் வேண்டுகோளுக்காக மாணவர் தலைவராகக் கருணாநிதி நடித்தார். அந்நாடகத்திற்கான பாராட்டுவிழாவில்தான் அவருக்குக் 'கலைஞர்' என்னும் சிறப்புப்பெயர் வழங்கப்பட்டது.<br>**திரைக் கலைஞர்**<br>எம்.ஜி.ஆர். முதன்முதலாக நடித்த 'ராஜகுமாரி' (1947) படத்துக்கான முழுவசனத்தையும் கலைஞர் எழுதினார். அத்திரைப்படம் பெரும் வெற்றி பெற்றது. அதனைத் தொடர்ந்து எம்.ஜி.ஆரின் நடிப்பில், மருதநாட்டு இளவரசி, மந்திரிகுமாரி, நாம். மலைக்கள்ளன் முதலான படங்கள் தொடர்ந்து வெளிவந்தன.<br>கலைஞரின் வசனங்கள் 'சொல் புதிது சுவை புதிது' என்று கேட்போர் வியக்கும் வண்ணம் அமைந்தன. சிவாஜி கணேசன் நடித்த முதல் படமான பராசக்திக்கும் கலைஞர் திரைக்கதை, வசனம் எழுதினார். அதன் பிறகு, சிவாஜி கணேசனின் நடிப்பில் உருவான திரும்பிப் பார், மனோகரா, ராஜாராணி முதலிய திரைப்படங்களும் கலைஞரின் கதை, வசனத்தில் தொடர்ந்து வெளிவந்தது.<br>அறிஞர் அண்ணாவின் ரங்கோன் ராதா கதைக்குக் கலைஞர் வசனம் எழுதியதோடு, அப்படத்தில் நான்கு பாடல்களும் எழுதினார். 1947ஆம் ஆண்டு, தன் 23ஆம் வயதில் திரைப்படங்களுக்கு எழுதத் தொடங்கிய கலைஞர், 2011இல் 92ஆம் வயது வரை நிறைவாய் எழுதினார்.<br>**இயற்றமிழ்க் கலைஞர்**<br>தன்னுடைய 22ஆம் வயதில் மலேசிய மண்ணில், சுபாஷ் சந்திரபோசின் இந்திய தேசிய இராணுவத்தைச் சேர்ந்த தமிழ்நாட்டு வீரர் மலேயா கணபதி என்பவர், ஆங்கிலேயரால் தூக்கிலிடப்பட்டு இறந்ததை அறிந்து கலைஞர் 'கயிற்றில் தொங்கிய கணபதி' என்ற சிறிய கட்டுரை நூலை எழுதினார்.<br>நளாயினி, சித்தார்த்தன் சிலை, சந்தனக் கிண்ணம், தாய்மை, புகழேந்தி, அணில்குஞ்சு உள்ளிட்ட பல சிறுகதைகளையும் ரோமாபுரிப் பாண்டியன், பொன்னர் சங்கர், தென்பாண்டிச்சிங்கம், ஒரே ரத்தம் உள்ளிட்ட புதினங்களையும் எழுதியுள்ளார். தம் வாழ்க்கை வரலாற்றை "நெஞ்சுக்கு நீதி" என்னும் தலைப்பில் ஆறு பாகங்களாக எழுதி வெளியிட்டுள்ளார்.<br>சங்கத்தமிழ், குறளோவியம், தொல்காப்பியப் பூங்கா என்னும் பெயரில் பழந்தமிழ் இலக்கியங்களுக்கும் அவர் உரை எழுதியுள்ளார்.<br>**முடிவுரை**<br>தமிழ், தமிழர், தமிழ்நாடு என்ற சிந்தனையிலேயே தம் ஆயுளைச் செலவிட்ட கலைஞர், தாம் சென்ற இடமெல்லாம் செறிவாகத் தமிழ் பேசித் தன்மானத்தை, தமிழ் உணர்வை, தமிழிலக்கியத்தை, பகுத்தறிவை, மத ஒருமைப்பாட்டை, சமூக நல்லிணக்கத்தை நமக்கெல்லாம் ஊட்டினார். தமிழின் பெருமிதங்களையும் விழுமியங்களையும் மீட்டெடுக்க எண்ணிய கலைஞர், அதற்கான பணிகளை தன் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்தார் . | |
| | ஆ | "இனிமைத் தமிழ்மொழி எமது எமக்கு இன்பம் தரும்படி வாய்த்தநல் அமுது".<br>அமுத மொழி – தமிழ் மொழி. தமிழ்மொழியின் மன்றத்திற்கு வருகை தந்துள்ள சான்றோர் பெருமக்களே! பள்ளி எனும் தேரின் அச்சாணியாகிய தலைமை ஆசிரியர் அவர்களே! ஒளி விளக்கின் தூண்டுகோலாகிய ஆசிரியர் பெருமக்களே! நீர்த் தடாகத்தின் ஆம்பல் மொட்டுகளாகிய மாணவச் செல்வங்களே! உங்கள் அனைவருக்கும் என் பணிவான வணக்கங்கள். தமிழின் சொல்வளம் குறித்தும், புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் உங்களிடத்தில் நான் பேசப் போகிறேன். | 8 |



நே ஜாய் கிறிஸ்டினாள் , பட்டதாரி ஆசிரியர் – தமிழ் ,
ஸ்ரீ சரசுவதி வித்தியா சாலை பெண்கள் மேல்நிலைப் பள்ளி , புதுவயல் , சிவகங்கை மாவட்டம் .

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**தமிழின் சொல்வளம்**

கால வெள்ளத்தில் கரைந்து போன மொழிகளுக்கு இடையில் நீந்தித் தன்னை நிலை நிறுத்திக் கொண்டுள்ளது, தமிழ் மொழி. சொல்வளம் இலக்கிய செம்மொழிகளுக்கெல்லாம் பொதுவானது, என்றாலும் தமிழ் மட்டும் அதில் தலைசிறந்தது.

**பயிர் வகைச் சொற்கள்**

தமிழ்ச் சொல் வளத்தைப் பல துறைகளிலும் காணலாம். அதில் சிறப்பாக பயிர் வகைகளில் சொல் வளத்தைப் பற்றி இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். தாவரத்தின் அடிப்பகுதியை அதன் மென்மை வன்மை குறித்துத் தாள், தண்டு, கோல், தட்டை, தூறு, கழி, கழை, அடி எனப் பகுத்துள்ளனர்.அடியில் இருந்து பிரிந்து செல்லும் மேல்நோக்கிய பிரிவுகளுக்கு கவை, கொப்பு, கிளை, சினை, போது, குச்சு, இணுக்கு எனப் பாகுபாடு செய்துள்ளனர்.

இலையின் வகைகளை அதன் மென்மை வன்மை பற்றி இலை, தாள், தோகை, ஓலை என்றும் காய்ந்த இலையைச் சருகு என்றும் காய்ந்த தோகையைச் சண்டு என்றும் பாகுபடுத்தி உள்ளனர். பூவின் மலரும் நிலைகளை அரும்பு, போது, மலர், வீ, செம்மல் எனப் பகுத்துள்ளனர். பிஞ்சின் வகைகளைப் பூம்பிஞ்சு, பிஞ்சு, வடு, மூச்சு, கவ்வை, குரும்பை, முட்டுக் குரும்பை, இளநீர், நுழாய், கருக்கல், கச்சல் எனப் பெயரிட்டுள்ளனர்

இதேபோல் குலை வகைகள், காய்கனி வகைகள், மணி வகைகள், இளம் பயிர் வகைகள், இளம்தளிர் வகைகள் என ஏராளமான தமிழ்ச் சொற்கள் இருக்கின்றன. இதனால், தமிழ் சொல்வளம் உடையது என்பதும், தமிழ்நாடு பொருள் வளம் உடையது என்பதும் தெளிவாக விளங்குகிறது.

**புதிய சொல்லாக்கத்திற்கான தேவை**

இனி, தமிழில் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்துப் பார்ப்போம். ஒப்பீட்டளவில் இன்று மொழியின் வளர்ச்சிக்கு ஆதாரமாகச் சொல்லாக்கம் விளங்குகிறது. நாளும் மாறிவரும் அறிவியல், தொழில்நுட்பத்தின் விளைவாகத் தகவல் தொடர்பியலில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் காரணமாக, இன்று தகவல் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகின்றது. ஒரு மொழியின் வளர்ச்சியென்பது இத்தகைய தகவல் தொழில்நுட்பப் புரட்சியை உள்வாங்கிக் கொண்டு, செறிவாக, வெளிப்படுவதாகும்.

குறிப்பாக இணையகங்களின் பக்கங்களில் அதிகபட்சமான இடத்தினைப் பிடித்துள்ள மொழிகளே, நன்கு வளர்ச்சியடைந்தவைகளாகக் கருதிட இயலும். இந்நிலையில், கருத்தியல் வளர்ச்சிக்கு ஆதாரமாக விளங்கும் சொற்கள் அதிக அளவில் உருவாக்கப்படுகின்ற மொழிகளே, உச்ச நிலையினை அடைய முடியும். தமிழைப் பொறுத்த வரையில், "ஆட்சி மொழியாகவும் உயர்கல்வியில் பயிற்று மொழியாகவும் தமிழே இடம்பெற வேண்டும்" என்பதால், புதிய சொல்லாக்க முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

இத்தகைய முயற்சிகள், தமிழ்மொழியின் வளர்ச்சி வேகத்தினைத் தூண்டுகின்றன: சொற்களஞ்சியம் பெருகிடக் காரணமாக அமைகின்றன. எனவே, அறிவியல் தொழில்நுட்ப யுகத்தில் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை இருக்கிறது என்று கூறி, எனது உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்



நே ஜாய் கிறிஸ்டினாள் , பட்டதாரி ஆசிரியர் – தமிழ் ,
ஸ்ரீ சரசுவதி வித்தியா சாலை பெண்கள் மேல்நிலைப் பள்ளி , புதுவயல் , சிவகங்கை மாவட்டம் .

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

| | | | |
|---|---|---|---|
| 44 | அ | **முன்னுரை**<br>வரலாற்றில் மனிதர்கள் வருகிறார்கள். சிலர் வரலாறாகவே மாறி விடுகின்றார்கள். இவர்கள் பாதையே இல்லாத இடத்தில் தங்கள் கால்களால் ஒற்றையடிப்பாதையை இட்டு பெரும் சாலையாக ஆக்குகிறார்கள். பலர் பயணிக்க வழி அமைக்கிறார்கள். கல்வியறிவற்ற சமூகத்திலிருந்து ஒற்றை ஒளிச் சுடராக வெளிவந்து, அந்த சமூகத்தையே ஒளிவெள்ளத்தில் நிரப்புகிறார்கள். அப்படிப்பட்டவர்களில் ஒருவர்தான் மேரி.<br>**மேரியின் குடும்பம்**<br>கருப்பினச் சிறுமி மேரி. வாழ்க்கையின் ஒரே ஒரு நிமிடத்தை கூட வீணடிக்கக் கூடாது என்று பகல் முழுவதும் பருத்திக் காட்டில் வேலை செய்யும் குடும்பத்தை சார்ந்தவள். அம்மா பாட்ஸியுடன் துவைத்து தேய்த்து துணிகளை அடுக்கி கொண்டு, பென் வில்சன் என்ற வெள்ளைக்கார முதலாளி வீட்டிற்குச் சென்றாள்.<br>**உன்னால் படிக்க முடியாது**<br>அங்கு வெள்ளைக்காரச் சிறுமிகள் விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டாள்: உள்ளே சென்றாள்: சுற்றிப் பார்த்தாள்: மேஜை மீது இருந்த புத்தகத்தை எடுத்துப் பார்த்தாள். "புத்தகத்தை என்னிடம் கொடு. நீ இதை எடுக்கக்கூடாது. உன்னால் படிக்க முடியாது. புத்தகங்கள், படிக்க முடியாதவர்களுக்கு இல்லை" என்ற வெள்ளைக்காரச் சிறுமியின் வார்த்தைகளால் மனம் கலங்கினாள்.<br>**மேரியின் விருப்பம்**<br>"நான் படிக்க வேண்டும். நான் படிக்கக் கற்றுக் கொள்ளப் போகிறேன். நான் எழுதப் படிக்கப் போகிறேன்" என்று சிந்தித்துக் கொண்டே இருந்தாள். தந்தை சாமிடம் தன் விருப்பத்தை வெளிப்படுத்தினாள். ஆனால், அங்குக் கருப்பினச் சிறுமிகள் படிப்பதற்கென்று பள்ளிக்கூடம் கிடையாது.<br>**பட்டம் பெற்ற மேரி**<br>மிஸ் வில்சன் என்ற வெள்ளைக்காரப் பெண் மேரியைப் படிக்க மேயஸ்வில்லிக்கு அழைத்தாள். அடங்காத ஆர்வத்துடன் தினமும் பத்து மைல் தூரம் நடந்து சென்று படித்தாள். அக்கம்பக்கத்தினருக்கு கணக்குச் சொல்லிக் கொடுத்தாள். சில ஆண்டுகள் முடிவில் பட்டம் பெற்றாள். அதில், 'இப்பட்டம் பெறுபவருக்கு எழுதப் படிக்கத் தெரியும்' என்று இருந்தது.<br>**மேரியின் உயர்கல்விப் பயணம்**<br>'அடுத்து என்ன செய்யப் போகிறாய்?' என்ற மிஸ் வில்சனின் கேள்விக்கு, 'கல்லூரியில் படிக்க விரும்புகிறேன்' என்றாள். மேரி உயர்கல்வி கற்க, ஊரே வழியனுப்பி வைத்தது: மேற்குப் பகுதியில் வசிக்கும் வெள்ளைக்காரப் பெண் ஒருத்தி பணம் அனுப்பினாள்.<br>**அறிதலில் ஆர்வம்**<br>பருத்தியின் முதல் பூவைப் பார்த்ததும் பரவசப்படும் மேரி, பருத்திச் செடி வளர்வதற்கு ஏன் இவ்வளவு காலம் எடுத்துக் கொள்கிறது? என்று சிந்தித்தாள். இலக்கற்றுச் சிந்திப்பது அவளுக்கு பிடித்தமானதாக இருந்தது. மேஜை மீது இருந்த பொருள் என்ன? என்று அறிந்து கொள்ளும் ஆர்வம் இருந்தது. "அதை நீ எடுக்கக்கூடாது" என்ற சிறுமியின் சொற்களால் மனம் கலங்கிய போதும், படிப்பைப் பற்றியே சிந்தித்தாள். "நான் வாசிக்கக் கற்றுக்கொள்ள போகிறேன்" என்ற ஆர்வமே மேரியின் வெற்றிக்கு அடிப்படை. பதினோரு வயதான மேரி தினமும் பத்து மைல் தூரம் நடந்து சென்று படித்தது, அவளது ஆர்வத்திற்கும் விடாமுயற்சிக்கும் எடுத்துக்காட்டு.<br>**புதிய நம்பிக்கை**<br>மேரி தான் கற்றதை அக்கம் பக்கத்தினருக்கும் கற்றுக்கொடுத்தாள். எழுதப்படிக்க தெரிந்ததும், 'போதும்' என்று நினைக்காமல் உயர்கல்வி கற்க விரும்பினாள். ஒடுக்கப்பட்ட சமூகத்தின் குரலாக எழுந்தாள். | 8 |



நே ஜாய் கிறிஸ்டினாள் , பட்டதாரி ஆசிரியர் – தமிழ் ,
ஸ்ரீ சரசுவதி வித்தியா சாலை பெண்கள் மேல்நிலைப் பள்ளி , புதுவயல் , சிவகங்கை மாவட்டம் .

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

| | | | |
|---|---|---|---|
| | | **முடிவுரை**<br>ஒடுக்கப்பட்ட சமூகம் எழுவதற்குக் காரணமாக அமைந்தது, மேரி பெற்ற கல்வி. பின்னாளில், மேரி கருப்பினக் குழந்தைகள் படிப்பதற்காகக் கட்டிய 'பெதுன் குக்மேன் தனியார் பள்ளி' பல்கலைக்கழகமாக வளர்ந்தது; தடைகளை எல்லாம் தகர்த்து முன்னேறி, அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்டின் ஆலோசகரானார். | |
| | ஆ | **கடின உழைப்பாளர் – (மாலையில் பூ விற்பவர், வீட்டு வேலை செய்பவர்)**<br>எங்கள் ஊரில் விமலா என்றொரு பெண்மணி இருந்தார். மாலையில் பூ விற்பார், வீட்டு வேலை செய்வார். அவர் கல்வியாளரோ, எழுத்தாளரோ, போராட்டக்காரரோ அல்லர்.<br>கடின உழைப்பாளர்.<br>எவ்வாறெனில், திருமணமான நாள் முதல் கணவரால் பல இன்னல்களைத் துன்பங்களை அனுபவித்ததோடு, இளம் வயதிலேயே விதவையுமாகி சமூக அவலத்துக்கும், உள்ளானார்.<br>துன்பங்களைப் பெற்ற அவர் துன்பம் துடைத்தூன்றும் தூணாக மாறினார். உழைப்பை மட்டும் மூலதனமாகக் கொண்டார். உழைப்பையே உயிர் மூச்சாய் மாற்றினார். வீட்டு வேலை முதல் கிடைக்கும் வேலைகளை எல்லாம் செய்து. தன் பிள்ளைகளின் கல்விக் கண்களைத் திறந்தார்.<br>ஒரு குழந்தையை மருத்துவராகவும் மற்றொரு குழந்தையைப் பொறியாளராகவும் மாற்றிய விமலா உழைப்பின் இலக்கணமாகத் திகழ்ந்தார்.<br>**சிறப்புமிக்கவர் – நர்த்தகி நடராஜ்**<br>மதுரை மாநகரில் பிறந்து, உலகின் பல்வேறு பகுதிக்குச் சென்று தன் கலையை நடத்தி சிறப்பு செய்தவர் நர்த்தகி நடராஜ்.<br>இவர் யார் என்றால் நமக்கும் நம் எண்ணங்கள் எல்லாம் சிதறும். இவர் ஒரு மூன்றாம் பாலினத்தவர். செல்வக் குடும்பத்தில் பிறந்த இவர் பெற்றோரால் வெறுக்கப்பட்டு, தன் ஆசிரியரால் ஈர்க்கப்பட்டு, அவரிடமே குருகுலமுறையில் பரதக் கலையை கற்றவர்.<br>தன் ஆசிரியரால் நர்த்தகி என்று அழைக்கப்பட்ட இவர் 30 ஆண்டுகளாக தன் பரதக் கலையை உலக அரங்கில் நடத்தி 2019–ஆம் ஆண்டு இந்தியா இவருக்கு பத்மஸ்ரீ விருதளித்தது. மனித இனத்தில் மற்றவரால் தாம் வெறுக்கப்பட்டாலும் தன்னையும், தமிழரின் பரதக்கலையையும் உலகிற்குக் கொண்டு சென்ற சிறப்புமிக்கவர் நர்த்தகி நடராஜ்<br>**போற்றத்தக்கவர் – (சாலை ஓரம் உணவகம் நடத்துபவர்)**<br>கோவை பேரூர் பகுதியில் வசிக்கும், பாட்டி பெயர் சொன்னாலே அனைவருக்கும் தெரியும். அந்த அளவுக்கு இட்லியால் புகழ் பெற்றவர். இன்றும் ஒரு ரூபாய்க்கு ஆவி பறக்கும் இட்லி விற்பவர்.<br>நல்ல சுவையான சட்னியோடு 80 வயதிலும் இலாபத்தை நோக்காமல் பலரின் பசியாற்றியவர். அவர் தேவையை ஆட்சியர் கேட்டாலும் எதுவும் வேண்டாம் என்பார்.<br>ஆட்சியர் அவருக்கு பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா வீடும், அரசு அவரை கௌரவித்தும் வருகிறது. ஒரு ரூபாய் இட்லியால் ஓராயிரம் கோடி மக்களால் போற்றப்படுபவர். | 8 |
| | | | |



நே ஜாய் கிறிஸ்டினாள் , பட்டதாரி ஆசிரியர் – தமிழ் ,
ஸ்ரீ சரசுவதி வித்தியா சாலை பெண்கள் மேல்நிலைப் பள்ளி , புதுவயல் , சிவகங்கை மாவட்டம் .

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



| | | | |
|---|---|---|---|
| 45 | அ | **குறிப்புச்சட்டம்**<br>முன்னுரை<br>அரசுப் பொருட்காட்சி<br>இனிய காட்சி அலங்காரங்கள்<br>பல்துறை அரங்குகள்<br>அங்காடிகள்<br>விளையாட்டுப்பகுதி<br>உணவு அங்காடிகள்<br>பொழுதுபோக்கு<br>முடிவுரை<br>**முன்னுரை:**<br>எங்கள் ஊரில் அரசுப் பொருட்காட்சி நேரு திடலில் ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. 50வது அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சிக்கு நான் எனது பெற்றோருடன் சென்று வந்தேன். நண்பர்களும் உடன் வந்தனர். அங்கே நான் கண்டு மகிழ்ந்த நிகழ்வுகள் குறித்து இக்கட்டுரை மூலம் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.<br>**அரசுப் பொருட்காட்சி:**<br>நகரத்தின் ஒரு பெரிய பகுதியை அரசு தெரிவு செய்து அதில் நடத்தப்படும் பொருட்காட்சி 'அரசுப் பொருட்காட்சி' எனப்படும். அரசுப் பொருட்காட்சி என்பதால் அரசின் செயல்பாடுகள், ஐந்தாண்டு திட்டங்கள் பற்றிய குறிப்புகளை அங்கே காணலாம்.<br>**இனிய காட்சி அலங்காரங்கள்:**<br>அரசுப் பொருட்காட்சி முழுவதும் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு இருந்தது. அரண்மனை போன்ற வடிவத்தில் முகப்புப் பகுதி வடிவமைக்கப்பட்டு இருந்தது. மிகப்பெரிய தோரண வாயிலும், மரக்கிளைகளில் தொங்கும் வண்ண விளக்குகளும் கண்களைப் பறித்தன. வண்ண வண்ணப் பலூன்கள் ஆங்காங்கே மரக்கிளைகளில் கயிற்றினால் கட்டி பறக்க விட்டிருந்தனர்.<br>**பல்துறை அரங்குகள்:**<br>தமிழக சுற்றுலாத்துறை சார்பில் நடத்தப்படும் இப்பொருட்காட்சியில் மத்திய, மாநில அரசு நிறுவனங்களை சார்ந்த சுமார் 150 அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றை நாங்கள் கண்டு களித்தோம். பல்வேறு துறைசார்ந்த அரங்குகளின் உள்ளே சென்று அரிய பல தகவல்களை அறிந்து கொண்டேன்.<br>**அங்காடிகள்:**<br>நூற்றுக்கணக்கான அங்காடிகள் அமைக்கப்பட்டிருந்தது. பல்வேறு பொருட்களையும் ஒரே இடத்தில் வாங்கிக்கொள்ளும் அளவுக்கு பல்வேறு அங்காடிகள் இருந்தன. தேவையான சில பொருட்களை மட்டும் என்னுடைய தாயார் வாங்கினார்கள்.<br>**விளையாட்டுப்பகுதி:**<br>விண்ணைத்தொடும் அளவிற்கு உயரமான இராட்டினங்களை கண்டோம். இராட்சச இராட்டினம், குவளை இராட்டினம், டிராகன் இராட்டினம் என பல்வேறு இராட்டினங்களில் ஏறி மகிழ்ந்தேன். சிறிய இரயில் வண்டியில் பயணம் செய்தது: சென்ற எங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியாக இருந்தது.<br>**உணவு அங்காடிகள்:**<br>நாகரீக மக்களின் தேவையை உணர்ந்து உணவு விற்பனை நடைபெற்றது. பெரியவர்களும் குழந்தைகளும் உண்டு மகிழ்ந்தனர். நாங்களும் டெல்லி அப்பளம், மிளகாய் பஜ்ஜி, பனிக்கூழ் முதலியவற்றை வாங்கி அனைவரும் பகிர்ந்து உண்டோம்.<br>**பொழுதுபோக்கு:**<br>சூரியன் மறைவுக்குப் பிறகு அங்கு அமைக்கப்பட்டிருந்த மிகப்பெரிய மேடையில் பலவிதமான கலை நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்பட்டன. மேடை நிகழ்ச்சிகளை அனைவரும் கண்டு களித்தோம்.<br>**முடிவுரை:** | 8 |



நே ஜாய் கிறிஸ்டினாள் , பட்டதாரி ஆசிரியர் – தமிழ் ,
ஸ்ரீ சரசுவதி வித்தியா சாலை பெண்கள் மேல்நிலைப் பள்ளி , புதுவயல் , சிவகங்கை மாவட்டம் .

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

| | | | |
|---|---|---|---|
| | | அரசின் இதுபோன்ற பொருட்காட்சிகள் நமது மாநில அரசின் திட்டங்களையும் செயல்பாட்டினையும், சாதனைகளையும் மக்கள் அறிய வழிவகை செய்கிறது. புதிய பொருட்கள் சந்தையில் வரும்போது அதன் விலை, பயன்பாடு போன்றவற்றை அறியலாம். பொருட்காட்சியைப் பெற்றோருடனும், நண்பர்களுடன் கண்டு மகிழ்ந்தது எப்பொழுதும் என் நினைவில் இருந்து நீங்காத ஒன்றாகும் . | |
| | ஆ | **விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்**<br>**முன்னுரை : –**<br>விண்வெளிக்கு பயணம் செய்த இந்தியாவின் முதல் பெண்மணி என்ற பெருமைக்குரிய கல்பனா சாவ்லா ஒரு சாதாரணப் பள்ளியில் படித்து. ஒரு விண்வெளி பொறியாளராக வாழ்ந்துக் காட்டினார், கல்பனா சாவ்லா தன் 41–வது வயதில் உலக மக்களின் நட்சத்திரமாகிப் போன ஒரு இந்தியப் பெண் வீராங்கனையின் வாழ்க்கை வரலாறு மற்றும் சாதனைகளைப் பற்றி விரிவாகக் காண்போம்,<br>**பிறப்பும். கல்வியும் : –**<br>கல்பனா சாவ்லா அவர்கள் இந்தியாவிலுள்ள ஹரியானா மாநிலத்தில் கர்னல் என்ற ஊரில் 01,07,1961–ல் பனாரஸ்லால் சாவ்லாவுக்கும் சன்யோகிதா தேவிக்கும் மகளாக. ஒரு பஞ்சாபி குடும்பத்தில் பிறந்தார்,கல்பனா சாவ்லா தனது ஆரம்பக்கல்வியை கர்னலில் உள்ள அரசு பள்ளியில் தொடங்கினார், 1982–ஆம் ஆண்டு சண்டிகரில் உள்ள 'பஞ்சாப் பொறியியல் கல்லூரி'யில் விமான ஊர்தியியல் துறையில் கல்விப் பயின்று இளங்கலைப் பட்டமும் பெற்றார், பின்னர். 1984 ஆம் அண்டு அமெரிக்காவில் உள்ள 'டெக்சாஸ் பல்கலைக்கழகத்தில்' விண்வெளிப் பொறியியல் துறையில் முதுகலைப் பட்டம் பெற்றார், 1986–ல் பௌல்தேரில் உள்ள 'கோலோரடோ பல்கலைக் கழகத்தில்' இரண்டாவது முதுகலைப் பட்டமும். பிறகு 1988–ல் விண்வெளி பொறியியல் துறையில் முனைவர் பட்டமும் பெற்றார்,<br>**முதல் விண்வெளிப் பயணம் : –**<br>1995–ல் நாசா விண்வெளி வீரர் பயிற்சிக் குழுவில் சேர்ந்த அவர். அடுத்த இரண்டு ஆண்டுகளில் 'கொலம்பிய விண்வெளி ஊர்த்தியான எஸ்,டி,எஸ்,–87 இல்' பயணம் செய்வதற்குத் தேர்வு செய்யப்பட்டார், 1997ஆம் ஆண்டு மேற்கொண்ட இந்த பயணத்தில். சுமார் 372 மணி நேரம் விண்வெளியில் இருந்து சாதனை புரிந்து வெற்றிகரமாக பூமி திரும்பினார், இதன் மூலம் விண்வெளிக்குச் சென்ற முதல் இந்தியப்பெண் என்ற பெருமையும் பெற்றார்.<br>**கொலம்பியா விண்கல நிகழ்வு : –**<br>முதல் விண்வெளிப் பயணத்தை வெற்றிகரமாக முடித்த கல்பனா சாவ்லா இரண்டாவது பயணத்திற்குத் தயாரானார், 16,01,2003 அன்று அமெரிக்காவின் கென்னடி நிலையத்திலிருந்து கொலம்பியா விண்கலம் எஸ்,டி,எஸ்,–107 அனுப்பி வைக்கப்பட்டது.இந்திய வம்சாவழி பெண்ணாகிய கல்பனா சாவ்லா உள்ளிட்ட ஏழுபேர் அதில் பயணித்தனர்.16 நாள் ஆய்வை முடித்து வெற்றிகரமாக பூமிக்குத் திரும்பிய அவர்கள் சென்ற அந்த விண்கலம் அமெரிக்காவின் டெக்ஸ் வான்பரப்பில் வெடித்துச் சிதறியது. கல்பனா சாவ்லா உள்பட ஏழு விலைமதிப்பற்ற விண்வெளி வீரர்களும் பலியாகினர்,<br>**முடிவுரை : –**<br>ஒரு சாதாரணப் பள்ளியில் படித்து. பலர் வியக்கும்படி தன் கனவுகளை நனவாக்கி வாழ்ந்து காட்டியவர் கல்பனா சாவ்லா. பெண்ணினத்தின் பெருமைக்கு எடுத்துக்காட்டாய் விளங்கிய அவர். இந்தியாவிற்கு உலகப் புகழ் சேர்ந்தவர் என்றால்து அது மிகையாகாது, கனவுகளைக் கண்டு அந்த கனவுகளை நனவாக்குவதற்கு விடா முயற்சியோடும். முழு மனதோடும் செயல்பட்டால் வெற்றி நிச்சயம் என்ற உண்மையை உலகிற்கு உணர்த்தி சென்ற வீரப்பெண்ணை நாமும் போற்றுவோம், | 8 |



நே ஜாய் கிறிஸ்டினாள் , பட்டதாரி ஆசிரியர் – தமிழ் ,
ஸ்ரீ சரசுவதி வித்தியா சாலை பெண்கள் மேல்நிலைப் பள்ளி , புதுவயல் , சிவகங்கை மாவட்டம் .

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com